மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கல்பாக்கம், நெய்வேலி இரண்டாவது அனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரையில், தமிழகத்திற்கு முழுவதையும் தர வேண்டுமென்று கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. புதிய திட்டங்களை நம்முடைய அரசு இந்திய அரசின் அனுமதி கோரி அனுப்பும்போது, இந்தத் திட்டங்களின் உற்பத்தி, தமிழகத்தின் தேவை ஆகியவற்றை கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் புதிய திட்டங்களுக்கு இந்திய அரசு அனுமதி அளித்து வருகிறது அல்லது நிராகரித்து வருகிறது. ஆகவே இந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்கெனவே கணக்கில் கொண்டுள்ளதால், இதிலே உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தை தமிழகத்திற்குத் தரவேண்டும், பற்றாக்குறை தீர அதுதான் வழி என்றும் தெரிவித்திருக்கிறோம்.

தேர்வாளருக்கான மதிப்பூதியத்தை உயர்த்துதல்.

* 83. **வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்படும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வணிகவியல் தேர்வுகளில், தேர்வாளருக்கான மதிப்பூதியம், 1974-க்குப் பின்னர் திருத்தி அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அத்தொகையினைத் தற்போது உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மதிப்பூதியங்களை உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

செல்வி ஆ லீலாவதி : விலைவாசி அதிகப்படியாக உயர்ந்துள்ள காரணத்தால், பத்தாவது, 12-வது வகுப்புகளுக்கான விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கு உள்ள மதிப்பூதியத்தைத் திருத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.